2008 ஏப்ரல் 17]

(ஈ) பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள்மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) என்ன, திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது எடப்பாடி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள்மீது நேற்றைய தினம் ஒரு கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. அ. தமிழரசு, திரு. வீ.எ.டி. கலியவரதன் போன்றவர்கள்மீதும் தொடர்ந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். நான் என்னுடைய ஆதங்க உணர்வுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்றபோது பதிவு செய்ய வேண்டுமென்கிற அனுமதியைத் தங்களிடம் எங்கள் பேரவையினுடைய உறுப்பினர் கோருகிறார். அதற்கு அனுமதி அளிக்குமாறு கொறடா என்ற முறையில் தங்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, திரு. வை. காவேரி அவர்கள் என்னை வந்து பார்த்தார். அதுசம்பந்தமான அறிவிப்பு S.P.-யிடமிருந்து எனக்கு வந்திருக்கிறது. அதை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வாருங்கள். அதை நான் காண்பிக்கிறேன். அதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. என். மாலைராஜா அவர்கள்